1990 மே 5]

இலாக்காவுக்கு அதன் அவசியத்தை உணர்த்துமா—வலி யுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அதன் அவசியத்தை அரசு உணர்ந்த காரணத்தால்தான், சுமார் 230 லட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அது ரயில்வேயின் பொது மேலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். ரயில்வே இலாக்காவுடைய பரிந்துரை அதற்குத் தேவை. மேம்பாலம் அமையவேண்டிய இடத்தில் அவர்கள்தான் கட்டுவார்கள். ஆனால் அது இந்த ஆண்டு இடம் பெறவில்லை. இருந்தாலும், அரசு இந்த ஆண்டு மறுபடியும் அந்தப் பாலத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மத்திய அரசை, குறிப்பாக ரயில்வே இலாக்காவை வற்புறுத்தும்.

சாலைகளைச் செப்பனிடுதல்.

*3705 திரு. எஸ். ஆர். முனிரத்தினம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் நகருக்குள் இருக்கும் சாலைகளைச் செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவள்ளூர் நகரத்தில் ஸ்ரீ வீரராகவப் பெருமாள் கோயில் இருக்கிறது. அது வளர்ந்து வருகிற பகுதி. அமாவாசை தினத்தன்று பக்தர்கள் அதிகமாக வருகின்ற பகுதி அது. அங்கே சீராக இல்லாத பல பகுதிகளை எடுத்துக் கொண்டு, அந்தச் சாலைகளைச் செப்பனிடும் ஆலோசனை இந்த அரசுக்கு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, திருவள்ளூரைப் போல எல்லா ஊர்களிலும் கோயில்கள் இருக்கின்றன. கோயில்கள் இருக்கிற ஊரில் உள்ள எல்லா சாலைகளையும் அரசே எடுத்துக் கொள்ள முடியாது. நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் என்று இருக்கின்றன. நகராட்சிக்குள் செல்கின்ற மாநில அரசுக்குச் சொந்தமான, சாலைகளும் உண்டு. திருவள்ளூரைப் பொறுத்தவரையில்

4 சாலைகள் ஹைவேஸில் இருக்கின்றன. செங்குன்றம்—திருவள்ளூர் சாலை 0.80 கி. மீ.—அதைப் புதுப்பிக்க 1 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. பெரியகுப்பம் இணைப்புச் சாலை 1.20 கி. மீ. இருக்கிறது. அதற்கு ரூ. 1.50 லட்சம் தேவை. பிறகு, சென்னை. திருத்தணி—ரேணிகுண்டா சாலை 2.80 கி. மீ. நீளம் இருக்கிறது. அதற்கு 3 லட்சம் ரூபாய் தேவை. திருமழிசை-சத்தியவேடு சாலை 4.40 கி.மீ. அதற்கு ரூ 9.60 லட்சத்திற்கு மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே மாநில அரசுக்குச் சொந்தமான சாலைகளை திருவள்ளூரில் புதுப்பிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. மீதியுள்ள சாலைகளை நகராட்சிகள் தான் செய்ய வேண்டும்.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம்: திருவள்ளூரில் அமைந்திருக்கும் ராஜவீதி என்று சொல்லக்கூடிய அந்தப் பெரிய சாலையை, அரசு மூலம் எடுத்துக் கொள்ளவேண்டுமென அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் தெரிவித்து விட்டார். நீங்கள் எடுத்துக்கொள்ள முடிந்தால் எடுத்துக் கொள்ளலாம். இல்லையென்றால் விட்டுவிடலாம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இயலாது என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுக்காலமாக ஏராளமான சாலைகள் செப்பனிடப்படாமல் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவைகளைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டால், பஸ் போகிற சாலைகளைத்தான் தார் போட்ட சாலைகளாகப் போடமுடியும் என்று சொல்கிறார்கள். முக்கியமான ஊர்களுக்குப் பஸ் விடவேண்டுமென்று கேட்டால் தார் போட்டால்தான் பஸ் விட முடியும் என்று சொல்கிற நிலை தமிழகம் பூராவும் இருக்கிறது. அரசு இதைப் பரிசீலித்து, 1980 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கை அடிப்படையாக எடுத்து இதைச் செய்து கொண்டிருப்பதால் இதைப் பரிசீலித்து மக்கள் தொகை கணக்கு அடிப்படையைக் கொஞ்சம் குறைத்து, முக்கியமான சாலைகளை எல்லாம் தார்ச் சாலைகளாக ஆக்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-35 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே தார்ச்சாலை, மண்

சாலை, கப்பி சாலை என்று கிடையாது. தமிழ்நாட்டில் எல்லா சாலைகளும் மண் சாலைகளாகத் தான் இருக்கின்றன. பெயருக்கு வேண்டுமானால் தார்ச்சாலை என்று இருக்கலாம். இந்த அரசு படிப்படியாக அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. முதலில் பஸ் சாலைகளுக்கு, அவைகளைப் பராமரிக்கின்ற வேலை, அதனூடே மற்ற பணிகள். அன்றைக்கே இவைகளைப் பற்றி எல்லாம் நான் படித்தேன். ஆர். ஆர். திட்டத்தின்கீழ் இவைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். எங்கேயாவது கொஞ்சம் கிழிசல் என்றால் ஒரு துணியைத் தைக்கலாம். வேட்டி முழுவதுமே கிழிந்து போனால் என்ன செய்வது? புது வேட்டி எடுக்கும் நிலைமைதான் ஏற்படும். அதுபோல தான் இதிலும் இந்த அரசுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லா சாலைகளையும் புதுப்பிக்கிற, சீர்படுத்துகிற நிலைமையை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருவழி மார்க்கம்.

*4362 திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் பேருந்து நிலையத்தில் இருந்து மயிலாடுதுறை, கும்பகோணம் செல்லும் பேருந்துகளும் இதர வாகனங்களும் குறுகலான ஒருவழி மார்க்கத்தில் செல்ல வேண்டியிருப்பதால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க இருவழி மார்க்கம் ஏற்படுத்த அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இருவழி பாதை ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1. திருவாரூர் பேருந்து நிலையத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் ஒரு வழி மார்க்கத்தை இருவழியாக மாற்றும் செயற்குறிப்பு மத்திய சாலை நிதித் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது.